DINAMANI. 7/5/18



# ஓரகடத்தில் தமிழ் வளர்ச்சி பண்பாட்டு மையம் அமைக்க நடவடிக்கை

**தாம்பரம் மே 6:** ஓரகடத்தில் தமிழ் வளர்ச்சி பண்பாட்டு மையம் அமைக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று தமிழ் வளர்ச்சித் துறை அமைச்சர் கே.பாண்டியராஜன் கூறினார்.

சென்னையை அடுத்த மேற்கு தாம்பரம் ஸ்ரீசாய்ராம் பொறியியல் கல்லூரி, இந்திய மேலாண்மைக் கல்விக் கழகம் ஆகியன இணைந்து நடத்திய, நிலைத்த வளர்ச்சிக்கான மேலாண்மை பயிற்சி குறித்த கருத்தரங்கு சனிக்கிழமை நடைபெற்றது. இதைத் தொடங்கி வைத்து அமைச்சர்பேசியது:மேலாண்மைகல்வி பயிலும் மாணவர்கள் இந்தியப் பொருளாதாரம் குறித்த அறிவாற்றலுடன், உலக பொருளாதாரத்தை இயக்கும் வலிமையான அரசியல், பொருளாதாரக் கட்டமைப்புகள் குறித்தும் அறிந்து கொள்ள வேண்டும்.

ஆளுமை சக்தியுடன் மதிப்புமிக்க புதுமைப் படைப்புகளைக் கையாளும் திறன் கொண்ட நிறுவனங்கள் தான் வெற்றியைத் தொடர்ந்து தக்கவைத்துக் கொண்டு நிலைத்த வளர்ச்சி பெறுவதுடன் உலகை மாற்றி அமைக்கும் சக்தியாகவும் திகழ்ந்து வருகின்றன. புதிய தொழில் சிந்தனைகளுடன் புதுமைப் படைப்புகளை உருவாக்கும் முயற்சிகளில் மாணவர்கள் தொடர்ந்து ஈடுபட வேண்டும்.




சாய்ராம் பொறியியல் கல்லூரியில் நடைபெற்ற கருத்தரங்க மலர் வெளியீட்டு விழாவில் (இடமிருந்து) கல்லூரி முதல்வர் சி.வி.ஜெயக்குமார், இந்திய மேலாண்மைக் கல்விக் கழக மண்டல இயக்குநர் நந்தகோபால், தலைவர் அனில்ராவ் பைலா, அமைச்சர் கே. பாண்டியராஜன், சாய்ராம் கல்விக் குழுமத் தலைமை செயல் அதிகாரி சாய்பிரகாஷ் லியோமுத்து, மேலாண்மைத் துறை இயக்குநர் கே.மாறன், பழனிக்குமார்.

ஸ்ரீசாய்ராம் கல்விக் குழுமம் சார்பில் ஓரகடத்தில் தமிழக அரசுக்கு நன்கொடையாக வழங்கப்பட்டுள்ள 5 ஏக்கர் இடத்தில் தமிழ் வளர்ச்சி பண்பாடு வளர்ச்சி மையம் அமைக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றார் அமைச்சர் கே.பாண்டியராஜன்.

முன்னதாக, ஸ்ரீசாய்ராம் கல்விக் குழுமத் தலைமைச் செயல் அதிகாரி சாய்பிரகாஷ் லியோமுத்து பேசியது:

சாய்ராம் கல்விக் குழுமத் தலைவர் மறைந்த லியோமுத்து, தமிழ் மொழி வளர்ச்சிக்கு பயன்படுத்த வேண்டும் என்று தாம்பரத்தை அடுத்த ஓரகடத்தில் 5 ஏக்கர் இடத்தை உயில் எழுதி வைத்துள்ளார். அந்த இடத்தை தமிழ்மொழி, பண்பாடு வளர்ச்சிக்குப் பயன்படுத்திக் கொள்ள அமைச்சர் கே.பாண்டியராஜனிடம் கோரிக்கை விடுத்துள்ளேன் என்றார்.

கருத்தரங்கில் இந்திய மேலாண்மைக் கல்விக் கழகத் தலைவர் அனில்ராவ் பைலா, மண்டல இயக்குநர் நந்தகோபால், கல்லூரி முதன்மை செயல் அலுவலர் சாய்பிரகாஷ் லியோமுத்து, கல்லூரி முதல்வர் சி.வி.ஜெயக்குமார், பழனிக்குமார், மேலாண்மை துறை இயக்குநர் பேராசிரியர் கே. மாறன், உள்ளிட்டோர் பங்கேற்றனர்.